கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.np.gov.lk e-mail: npplane@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல. / මගේ අංකය / My No. } சுற்றுநிருப இல: 2015/10
உமது இல / ඔබේ අංකය / Your No. }
திகதி / දිනය / Date } 27-11-2015

மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பாடசாலை அதிபர்கள்,
வடக்கு மாகாணம்.

## 2016ஆம் ஆண்டுக்குரிய கல்வி அமுலாக்கத் திட்டங்கள்

1. **ஆரம்பப் பிரிவு மாணவர்களை வலுப்படுத்தல்:**

1.1. ஒரு கோட்டத்தில் இரண்டு பாடசாலைகள் ஆரம்பப் பிரிவில் சிறந்த பாடசாலைகளாக செயற்படுதல் வேண்டும். குறித்த பாடசாலைகளில் தரம் 1 இல் இரண்டு வகுப்புக்களிலும், மொத்தம் 60 மாணவர்கள் இருப்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

1.2. தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை சிறப்பான ஒழுங்கமைப்பிலான கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதற்கு பல்வகை கற்றல் செயற்பாடுகள், செயல் அட்டைகள் போன்றவை சிறப்பான முறையில் செயற்படுத்தப்படல் வேண்டும்.
சகல மாணவர்களும் கணிதம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய சகல துறைகளிலும் சிறந்தவர்களாக இருப்பதற்கேற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

1.3. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சகல மாணவர்களும் தோற்றுவதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

1.4. மேற்படி புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் சகல மாணவர்களும் இரு பாடங்களிலுமாக மொத்தம் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

2. **இடைநிலைப் பிரிவு மாணவர்களை வலுப்படுத்தல்:**

2.1. தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். இவ்வகுப்புக்களில் கல்வி கற்கும் சகல மாணவர்களும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். இதற்காக, கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்கள் கூடுதலான கவனம் எடுத்தல் வேண்டும். உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் இச்செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முழுமையான கவனம் செலுத்துவதுடன், உரிய காலத்தில் பாடத்திட்டங்கள் நிறைவுபெறுவதையும் உறுதிப்படுத்தி, தவணைப் பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வின் மூலம் குறைந்த பெறுபேற்றைக் கொண்ட மாணவர்களை இனங்கண்டு, கணித, விஞ்ஞான கற்றல் மேம்பாட்டுக்கான விசேட வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

2.2. தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான வகுப்பு மாணவர்களுக்கு வலய மட்டத்தில் விசேட பயிற்சிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.

2.3. தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு மாகாண மட்டத்தில் தயாரிக்கப்படுகின்ற செயற்பாடுகள் வலய ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள்

செயலாளர் / ලේකම් / Secretary } 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office } 021-3202704 (Admn.) 021-3202568 (Dev.) 021-3202281 (Plan.) 021-3202309 (Acct.) 021-7390665 (DSW)
தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021-2220794

மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோரது ஒத்துழைப்புடன் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். மேலும் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தமிழ்/சிங்களம் மற்றும் வரலாறு ஆகிய கருப்பாடங்கள் உட்பட சகல பாடங்களிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெறுவதனை உறுதிப் படுத்திக்கொள்ளல் வேண்டும்.

2.4. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தரம் 11 இல் கல்வி கற்கும் சகல மாணவர்களும் தோற்றுவதனை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

2.5. மேற்படிப் பரீட்சையில், சகல மாணவர்களும் இரண்டு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களிலும் சித்தியடைவதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

**3. உயர்தரப் பிரிவு மாணவர்களை வலுப்படுத்தல்:**

3.1. க.பொ.த. உயர்தரத்தின் கணித, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பிரிவில், 40%உம் வர்த்தகப்பிரிவில் 35% உம் கலைப்பிரிவில் 25%உம் மாணவர்கள் உள்வாங்கப்படல் வேண்டும்.

3.2. க.பொ.த. உயர்தரத்தின் 40% மாணவர்கள் கணித, விஞ்ஞானத் துறையில் கற்பதற்கேற்ற வகையில், க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கணித, விஞ்ஞான பாடங்களில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.3. மேற்படி விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆசிரிய, பௌதிக வளங்கள் வழங்கப்படல் வேண்டும்.

3.4. க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களும் 03 பாடங்களிலும் சித்தியடைவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

**4. உளநலச் செயற்பாடுகளை வலுப்படுத்தல்:**

4.1. பாடசாலைகளில் மாணவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, 300 மாணவர்களுக்கு மேற்பட்ட சகல பாடசாலைகளிலும் **“ மாணவர் மகிழ்வகம்”** என்னும் உளநலச் செயற்பாட்டு அறையை தாபித்தல் வேண்டும். இதனூடாக, மாணவர் உளநலம் சம்பந்தமான அல்லது அவர்களுக்கேற்படும் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்படுவதை உளநல வழிகாட்டல் ஆசிரியர்கள் உறுதிப் படுத்தல் வேண்டும்.

5. உடல், உளரீதியான தண்டனைகள் வழங்கப்படுவதனை தவிர்த்தல் வேண்டும். (சுற்றுநிருபம் 2005/17)

6. விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வி, நலன்களிலும் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

7. மாணவர் வரவு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பாடசாலைக்குச் சமுகமளிக்காத மாணவர் தொடர்பாக, கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு மாதமொரு முறை நடைபெறல் வேண்டும்.

8. மாணவர் இடைவிலகல் தவிர்க்கப்படல் வேண்டும்.

9. ஒழுக்க.விழுமியப் பண்புகளை மாணவர்களிடத்தில் வளர்த்தல் வேண்டும். (சுற்றுநிருபம் 07/2015)

10. மாணவர் கல்விச் சபதம் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

இ.இரவீந்திரன்,
செயலாளர்

**இ. இரவீந்திரன்**
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

பிரதி:

1. கௌரவ. கல்வி அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

2. ஆளுநரின் செயலாளர்,
வடக்கு மாகாணம்.

3. பிரதம செயலாளர்,
வடக்கு மாகாணம்.